# செய்திகளும் குறிப்புகளும்

**22.05.2025, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1109**

---

**ஸ்ரீ அரவிந்தர் -பகவத்கீதை – பேருரைகள்**

**1. கீதை ஆராய்ச்சி -நமது நோக்கு**

உலகில் புனிதமான மறைஞான நூல்களும், பூரணமான அருண்மொழிகளும் இருப்பதைப் போலவே, புனிதமற்ற ஞான நூல்களும், அரைகுறையான அருண்மொழிகளும் பல உள்ளன. இவையன்றி, தத்துவங்கள், சமயங்கள், சமயப்பிரிவுகள், சமய சாத்திரங்கள், சம்பிரதாயங்கள் ஆகிய பலவும் மலிந்து கிடக்கின்றன. முதிர்ந்த அறிவு படைத்தவரும் சரி, அறிவு அறவே அற்றவரும் சரி, இவற்றுள் ஒன்றன்பால் அலாதியான அன்பும் வெறியுங் கொண்டு, குறித்த அந்நூல் ஒன்றே ஆண்டவன் அருளிய சநாதன மொழி, பிறயாவும் போலி அல்லது நிறைவு அற்றவை என்றும், அதிலடங்கிய தத்துவ முறையொன்றே பகுத்தறிவின் இறுதியான சொல். மற்றவை அபத்தங்கள் என்றும், அவ்விதம் அபத்தங்களாயிராமல் ஒரே தத்துவ முறையுடன் தொடர்புற்றிருப்பினும், அவை அரைகுறையான முறைகள் என்றும் சாதிப்பர். பௌதிக சாத்திர ஆராய்ச்சியில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களுங்கூட, நாளடைவில் ஒரு சமயக் கோட்பாட்டின் பதவியைப் பெறலாயின. அதன் பயனாக, சமயமும் ஆத்ம ஞானமுங்கூட, அறியாமையும் மூட நம்பிக்கையுமே கொண்டவை எனவும், தத்துவம் உதவாக்கட்டை எனவும் தள்ளி வைக்கப்படலாயின. அறிவுடையோரும் மயக்கமுற்று, புத்தி மழுங்கி, இத்தகைய சமய வெறிகளிலும் வீண் சச்சரவுகளிலும் ஈடுபடலாயினர்.

இப்போதுதான் மக்களினம் சிறிது அடக்கமும் அறிவு விளக்கமும் பெற்றுவருகின்றது. நம் சகோதரர்கள் நமக்கு அன்னியமான தத்துவங்களையும் சமயங்களையும் சம்பிரதாயங்களையும் தழுவி நிற்பதன் காரணமாக, அவர்களை நாம் வழிபடும் கடவுளின் பெயரால் இனியும் கொலை செய்வதில்லை. நமது அபிப்பிராயத்தினின்று மாறுபட்டு நிற்கும் அயலார்களை இனியும் நாம் தூஷிப்பதில்லை. உண்மை எங்குமே பரவியுள்ளது என்றும், அது நமது ஏகபோக உரிமையல்ல வென்றுங் கூட நாம் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதர மதங்கள் தத்துவங்களைத் தூஷணை செய்யும் பொருட்டின்றி, அவை நமக்குப் போதிக்கக்கூடிய உண்மைகளுக்காக அவற்றை நாம் ஆராயவும் முற்பட்டிருக்கிறோம்.

நிலைமை இவ்விதமாக முற்போக்கு அடைந்து இருக்கிறதாயினும், பழைய மனப்போக்கு நம்மை அடியோடு விட்டு விலகவில்லை. நமது உண்மையொன்றே, பிற சமயங்களும் தத்துவங்களும் கண்டறியாத உயர் ஞானத்தை அளிக்கவல்லது எனப் பறைசாற்றும் போக்குடையவர்களாகவும், நாம் புகழ்ந்து போற்றும் புனித மறைஞான நூலே அனாதியான உண்மையை வெளியிடுகின்றது எனப் பிறரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தும் இயல்பினராகவும் நாம் இன் னும் இருந்துவருகிறோம்.

இந்த நிலையில், வேதம், உபநிடதம், கீதை போன்ற பண்டை மறைகளை ஆராயப் புகுங்கால், நாம் அவற்றை எந்த நோக்குடன் அணுகுகிறோம், அவற்றினின்று மக்கட்குலம் இன்றும், இனி வருங்காலத்திலும், பெறக்கூடிய நலன்கள் எவையென நாம் எண்ணுகிறோம், என்பனவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுவது நலமாகும்.

நாம் அனைவரும் நாடும் சநாதனமான உண்மையொன்று உளது. அதைப்பற்றி யாதொரு ஐயமும் இல்லை. அப்பேருண்மையின் ஒளியிலேதான், பிற உண்மைகள் ஞானத்தின் திட் டத்தில் தத்தமக்குரிய விளக்கங்களையும் உரிமைகளையும் பெறுகின்றன. இதன் காரணமாகவே, அதை நாம் ஒரே திட்டமான சூத்திரத்திற்குள் அடக்கிவிட முடியாது. அதை ஒரு குறித்த மறை அல்லது தத்துவ முறைக்குள்ளோ, ஆசாரியர், சிந்தனையாளர், தீர்க்கதரிசி அல்லது தெய்வ புருடர் ஒருவரின் மொழிகளுக்குள்ளோ, பூரணமாயும், அதன் உட்பொருள்கள் யாவும் அடங்கலாகவும் காண்பது அரிது. இது அவ்வுண்மையைப் பற்றி நாம் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டிய முதல் விஷயமாகும். அவ்வுண்மையானது ஒன்றேயாகவும் சநாதனமாகவும் இருப்பினும், காலம் என்னும் வரையறைக்கு உட்பட்டும், மானிட மனத்தின் மூலமாகவுமே, அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுகின்றது. இது அதைப்பற்றி நாம் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய இரண்டாவது விஷயமாகும். ஆதலால், ஒவ்வொரு மறைநூலிலும் இரண்டு அம்சங்கள் இன்றியமையாதனவாக உள்ளன. ஒன்று, தாற்காலிகமானது; அழியக்கூடியது; அது தோன்றின காலத்திலும் நாட்டிலும் நிலவியிருந்த கருத்துக்களைச் சார்ந்தது. மற்றொன்று, சநாதனமானது ; அழிவற்றது; எக்காலத்திலும் எந்நாட்டிற்கும் வழங்குவதற்கு உரியது. ஒரு மறை நூல் தோன்றிய காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு, அதன் நோக்கும் பொருளும் எவ்வித மிருந்தன என்பதை நாம் திட்டமாகவும் உறுதியாகவும் அறிய முடியாது. அதிலுள்ள எந்த அம்சமானது, எந்த நாட்டிலும் எக்காலத்திலும் வழங்குவதற்கு உரியதாயிருப்பதுடன், மன அறிவினாலும், உயரிய உள்விழியினாலும் காணப்பட்டும் அனுபவிக்கப்பட்டும் வாழ்க்கையில் அனுஷ்டிக்கப்பட்டும் வந்திருக்கின்றதோ அந்த அம்சமே நமது பூரணமான, நிரந்தரமான மதிப்பிற்கு உரியதாகும்.

கீதையை எடுத்துக்கொள்வோம். அது தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்கள் அதிலடங்கிய தத்துவங்களுக்கு எப்பொருள் கொண்டிருந்தனர் என்பதைச் சரியாக ஆராய்ந்தறிவது முடியாது. அது முடியுமாயினும், அது அவ்வளவு முக்கியமான விஷயமும் அன்று. அது முடியாத காரியமென்பது, கீதைக்கு இதுகாறும் எழுதப்பட்டிருப்பனவும், இன்றுங் கூட எழுதப்பட்டு வருவனவுமான விளக்கவுரைகள் ஒன்றுக் கொன்று மாறுபட்டிருப்பதிலிருந்தும், ஒவ்வொன்றும் தன் சொந்த தத்துவ முறையையும் சமயக் கருத்துக்களையுமே அந்நூலில் புகுத்தியிருப்பதிலிருந்தும் தெளிவாகக் காணக்கிடக்கின்றது. ஆகவே, கீதையில் காணும் தத்துவ முறை சம்பந்தமான விஷயங்களை விலக்கிவிட்டு, அதிலடங்கியுள்ள உயிர் ததும்பும் உண்மைகளை மட்டுமே நாம் நாடலாம். அவ்வுண்மைகளினின்று நமக்கும் உலகுக்கும் உதவியாயிருக்கக்கூடிய விஷயங்களைக் கிரகித்து, அவற்றை, இக்கால மனோநிலைக்குப் பொருத்தமானவாயும், இக்கால ஆத்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியனவாயும் உள்ள இயற்கையான, சீவனுள்ள உருவிலும் தோற்றத்திலும் அமைத்துக்கொள்ளலாம். நாம் பயனுறச் செய்யக்கூடியவையெல்லாம் இவையே.

இம்முயற்சியில், நமது தனித்தன்மையினாலும் நம்மைச் சூழ்ந்துள்ள கருத்துக்களின் காரணமாகவும் தோன்றும் பல பிழைகள் நுழையவும் கலந்துவிடவும் நாம் இடங் கொடுத்துவிடக்கூடும். நமக்கு முன் பல பெரியோர்கள் இவ்வண்ணமாகச் செய்திருக்கின்றனர். ஆனால், இவ்விதம் செய்யாது. இம்மகத்தான மறைநூலின் உட்கருத்தில் ஆழ்ந்து செல்லவும், அதன்படியே நமது வாழ்க்கையை நடத்தவும் முயலுவோமாயின், அதிலிருந்து நாம் எவ்வளவு உண்மையைக் கிரகித்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு உண்மையையும், எத்தகையச் ஆத்மீகச்சக்தியையும் நேரான உதவியையும் அதிலிருந்து நாம் அடைய வேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ளதோ, அத்தகைய சக்தியையும் உதவியையும் அதில் நாம் கட்டாயமாகக் காண்போம். அவற்றை அளிப்பதற்கெனவே மறைநூல்கள் எழுதப்படலாயின. மற்ற விஷயங்கள் யாவும் வெறும் கோட்பாடும் நடைமுறைக் காரியங்களுக்கு உதவாத தர்க்க வாதமுமேயாகும்.

*(தொடரும்......)*

## தகவல்கள் ( I N F O R M A T I O N )

**சையரின் ஒரு பிரிவான கல்வி உதவி நிதியின் (இஎஸ்எஃப்) அறிவிப்பு:**
(Announcement by Educational Support Fund (ESF), unit of SAIIER:)

அன்பார்ந்த ஆரோவில்வாசிகளுக்கு, குறிப்பாக ஆரோவில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு,
சையர் தனது தணிக்கையாளரை மேற்கோள் காட்டி அனுப்பும் மின்னஞ்சல்களிலும், எஃப்ஏஎம்சி, டிசிஜியின் மின்னஞ்சல்களிலும், நிதி பரிமாற்றங்கள் தொடர்பான மாஸ் மின்னஞ்சல்களிலும் செயல்பாடு, நிதி நிர்வாகத்தில் பல்வேறு மாற்றங்களைச் செயல்படுத்த இஎஸ்எஃப்க்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து எங்களுக்கு விளக்கங்கள் தேவை, ஆனால் எங்களது மின்னஞ்சல்களில் இதற்கான விளக்கம் குறித்து இதுவரை எந்தவொரு மின்னஞ்சலையும் நாங்கள் வரப் பெறவில்லை. இந்த தெளிவின்மை எங்களது செயல்பாட்டை முடக்கியுள்ளது. மேலும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இந்நிலை குறித்து தெரிவிக்க வேண்டியதற்கு நாங்கள் வருந்துகிறோம்.

(1) **பின்னணி:** முன்னர் உதவித்தொகை மற்றும் கல்வி நிதி உதவி (எஸ்இஎஃப்) என்று அழைக்கப்பட்ட இஎஸ்எஃப், ஆரோவில் மாணவர்களுக்கு இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பயில படிப்புச் செலவுகளுக்காக நீண்டகால வட்டியில்லாக் கடன்கள் மூலம் நிதி உதவி வழங்கி வருகிறது. கடன்களைத் திருப்பிச் செலுத்துவது மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நிதித் திறனைப் பொறுத்தது; திருப்பிச் செலுத்துதல் இஎஸ்எஃப்க்கு ஒரு அத்தியாவசிய வருமான ஆதாரமாக மாறிவிட்டது. மற்றொரு வருமான ஆதாரம் தனிநபரான ஆரோவில்வாசி, ஆரோவில் நிறுவனங்களிடம் இருந்து நன்கொடைகள் (அவர்களுடைய நிதிச்சேவை கணக்குகளிலிருந்து கல்வி உதவி நிதியின் நிதிச்சேவை கணக்கு 252200) பெறுதல். கடந்த காலங்களில், பிசிசி இடமிருந்து வருடாந்திர பட்ஜெட், ஏவி யூனிட்டி ஃபண்ட் மூலம் வெளிநாட்டிலிருந்து நன்கொடைகள், இந்திய நிறுவனங்களிடம் இருந்து பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதிகள் ஆகியவை பிற வருமான ஆதாரங்களாக இருந்தன.

(2) **நிதியாண்டு 2025-26 இலிருந்து நிதி மேலாண்மை**
1.4.2025 முதல் இஎஸ்எஃப் (ESF) பின்வருமாறு செயல்படும் என்று நாங்கள் கருதுகிறோம்:

**படிப்புச் செலவுகளைச் செலுத்துவது** தொடர்பாக:

- இஎஸ்எஃப் கடன் கொடுக்க அனுமதிக்கப்படவில்லை; இஎஸ்எஃப் நிதி உதவி மட்டுமே வழங்க முடியும்.
- இஎஸ்எஃப் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் படிப்பதற்கு இந்திய நாட்டவருக்கு நிதி உதவியை வழங்கலாம்.
- வெளிநாட்டு பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் (ஆரோவில் குடியிருப்பு விசா உள்ளவர்களுக்கு கூட) இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ படிப்பதற்கு எந்வொரு நிதி உதவியையும் இஎஸ்எஃப் **வழங்க கூடாது.**
- கேள்வி: ஆரோவில்லில் வசிக்கும் வெளிநாட்டு பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் மற்றும் தங்கியிருப்பதற்கான விசா வைத்திருப்பவர்கள், ஆரோவில் பவுன்டேஷன் கீழ் செயல்படும் பள்ளிகளில் பயிலுவதற்கு இஎஸ்எஃப் இலிருந்து கல்வி உதவித் தொகையை பெற முடியுமா, (எ.கா). நெஸ்ஸில், ஃபியூச்சர் ஸ்கூல் ஏற்பாடு செய்யும் எடெக்ஸெல் (EdExcel) தேர்வுகளுக்காக?

**இஎஸ்எஃப்-இன் வருவாய்க்கு நன்கொடை அளிப்பது தொடர்பாக:**

- ஆரோவில் நிறுவனங்கள் மற்றும் இந்திய பாஸ்போர்ட் வைத்திருக்கும் தனிநபர்கள் இஎஸ்எஃப்க்கு நன்கொடை அளிக்கலாம். (அவர்களின் நிதிச்சேவை கணக்குகளிலிருந்து அல்லது வங்கி பரிமாற்றம், காசோலை அல்லது ரொக்கம் போன்ற பிற வழிகள் மூலம்) இஎஸ்எஃப் நிதிச்சேவை கணக்கு எண். 240001. ஆரோவில் யூனிட்டி ஃபண்ட் மெயினில் நிதியை டெபாசிட் செய்யலாம்.
- வெளிநாட்டு பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் - ஆரோவில்லில் தங்கியிருப்பதற்கான விசா வைத்திருப்பவர்கள் உட்பட - இஎஸ்எஃப் நிதிச்சேவை கணக்கு எண் 240001-க்கு ஆரோவில் யூனிட்டி ஃபண்ட் மெயின் மூலம் தங்களது பராமரிப்புத் தொகை நிதிச்சேவை கணக்குகளிலிருந்து நன்கொடை அளிக்க முடியாது. வெளிநாட்டு பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் - நிதிச்சேவை கணக்குகள் அல்லது இந்தியா அல்லது வெளிநாடுகளில் உள்ள தனிப்பட்ட வங்கிக் கணக்குகளிலிருந்து - நன்கொடைகள் எஸ்பிஐ, புதுதில்லி எஃப்சிஆர்ஏ (FCRA) அக்கவுண்ட் மூலம், தற்போதைய விதிகளின்படி இந்திய ரூபாயில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்பட வேண்டும். (ஆர்பிஐ இன்வேர்டு ரெமிட்டன்ஸ் குறியீடு P1303 பயன்படுத்தப்பட வேண்டும்.)

(3) **திருத்தப்பட்ட வழிமுறை குறித்த தகவல்தொடர்பு.** மேற்கண்ட கருத்துகள் குறித்து இஎஸ்எஃப் தெளிவுப் பெற்றவுடன், நிதி உதவியை கையாளும் விதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இஎஸ்எஃப் விண்ணப்பப் படிவத்தை (கல்விக்கான நிதி உதவி) மாற்றியமைக்கும்.

இஎஸ்எஃப், நன்கொடையாளர்கள் மற்றும் நன்கொடையாளர் அமைப்புகளுக்கு இஎஸ்எஃப்-இன் திருத்தப்பட்ட நோக்கம் குறித்து தெரிவிக்க கடமைப்பட்டுள்ளது, இது கடந்த காலத்தில் அனைத்து நாட்டினரும் ஆரோவில்வாசிகளுக்கு ஆதரவளிப்பதில் அதிக சமத்துவத்தை உள்ளடக்கியது.

இனிமேல் நாங்கள் நிதி உதவிகளை (கடன்களை அல்ல) வழங்குவோம் என்ற எதிர்பார்ப்பைக் கருத்தில்கொண்டு, விண்ணப்பதாரர்களின் தனிப்பட்ட நிதி மற்றும் ஆதரவு தேவை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் கூற்றுகளை இன்னும் கடுமையாக ஆராய வேண்டும். முந்தைய பயனாளிகள் பணத்தை திருப்பிச் செலுத்தாவிட்டால், இஎஸ்எஃப்யின் வருமானம் குறைய வாய்ப்புள்ளது.

04.05.2025 அன்று, எங்கள் புரிதலின் மேற்கண்ட சுருக்கத்தை சையர், சார்டர்ட் அக்கவுண்ட்ஸ், எஃப்ஏஎம்சி, டிசிஜி ஆகியோரிடம் சமர்ப்பித்து, உறுதிப்படுத்தல் அல்லது திருத்தம் செய்யக் கோரினோம். 18.05.2025-க்குள் விளக்கம் அளிக்குமாறு கேட்டுள்ளோம், ஆனால், இது வரை எந்தவொரு விளக்கமும் வரப்பெறவில்லை. இஎஸ்எஃப் குழுவிற்காக - *லூகாஸ் (நிர்வாகி) - 19.5.2025*

**இறைவனின் சித்தத்திற்கு சரணாகதி செய்தல் – ஸ்ரீ அன்னை**

**…….. ஆனால் இவ்வாறு நடக்க வேண்டுமானால் நீ அகங்காரத்தின் குறுகிய எல்லைகளைத் தாண்டிச் சென்றிருக்க வேண்டும்.**

**உண்மையான சரணாகதி உன்னை விரிவாக்குகிறது; அது உன் திறமைகளை விருத்தி செய்கிறது; நயத்திலும் அளவிலும் நீயாக அடைந்திருக்க முடியாததற்கும் அதிகமாக உனக்குக் கொடுக்கிறது.**

## அறிவிப்புகள் (Announcements)

**இளைஞர் கல்வி மையம் வழங்கும் - மனதின் உலகம் - பேசலாம் வாருங்கள் - எண்ணங்கள் மலரட்டும்.**

**ஆரோவில் இளைஞர் கல்வி மையம் பொன்விழாவை நோக்கி வியாழக்கிழமை தோறும்**

- **முதல் அமர்வு: பிற்பகல் 3 மணி முதல் மாலை 4 மணி வரை, இரண்டாவது அமர்வு: மாலை 4:15 - 5:15**
- **தலைப்பு: மனதின் உலகம் - பேசலாம் வாருங்கள் - எண்ணங்கள் மலரட்டும்**
- **ஒருங்கிணைப்பாளர்: கவிஞர் ஆர். மீனாட்சி**
- **இடம்: ஆரோவில் இளைஞர் கல்வி மையம்**
- நாம் தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் உரையாடுவோம், அன்புதான் முதலீடு.
- வியாழக்கிழமைக்கு நிகழ்வுக்கு, செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்குள் உங்கள் வருகையைப் பதிவு செய்யவும்.
- வியாழக்கிழமை வட்டம் ஏற்பாட்டாளர் தொடர்பு:
- 0413 2623 773, tamil@auroville.org.in

இந்த நிகழ்வு ஆரோவில் சமூகத்திற்கு ஆர்வமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் இந்தத் தகவலைப் பகிர்ந்து கொள்வதற்கு உங்கள் உதவிக்கு நன்றி. அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.
*திருமதி. வத்சலா சரவணன்*

---

### ஆரோவில் பேக்கரி & கஃபே மே 18-24 வரை மூடப்படும்

ஆரோவில் பேக்கரி & கஃபே பழுதுபார்ப்பு மற்றும் பொதுப் பராமரிப்பு காரணமாக மே 18 ஞாயிற்றுக்கிழமை முதல் மே 24 சனிக்கிழமை வரை மூடப்படும்.
உங்கள் புரிதலுக்கு நன்றி, *ஆரோவில் பேக்கரி & கஃபே குழு*

---

### சையர் ஆராய்ச்சி முன்முயற்சிகளுடன் ஒத்துழைக்க சமூகத்தை அழைக்கிறது

சையர் (SAIIER), ஆரோவில்லில் ஆராய்ச்சி முன்முயற்சிகளை விரிவுபடுத்துவதையும், ஆரோவில் சாசனத்தில் கருதப்படும் மதிப்புகளின்படி வாழ்வதையும் நோக்கமாகக் கொண்டு சமூகத்தை அழைக்கிறது. இந்த அமர்வு சையர் (SAIIER) குழு, மற்றும் சமூகத்தின் தீவிர பங்கேற்புடன் செழித்து வளரும் வரவிருக்கும் திட்டங்கள் பற்றிய அறிமுகத்தை வழங்குகிறது. சையரில், ஆரோவில்லுக்கும் உலகின் பிற பகுதிகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க விரும்புகிறோம். ஆராய்ச்சியை ஒரு ஊடகமாகப் பயன்படுத்துவதன் மூலம், ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் ஊக்குவிக்கக்கூடிய செயல்படக்கூடிய முன்மாதிரிகளை நாங்கள் வழங்க முடியும்.

தேதி: 30 மே 2025, நேரம்: 15:30 - 16:30, இடம்: சையர் கூட்ட அரங்கம்

---

### கவிதை வட்டம் (Poetry Circle)

நீங்கள் எழுதிய கவிதையை படிக்கலாம், உங்களுக்கு பிடித்த ஒரு கவிதை அல்லது பத்தியைப் பகிரலாம் அல்லது அமைதியாகக் கேட்கலாம். குடிப்பதற்கு பானங்கள் கிடைக்கும், அனைவரும் வருக! :)
24.05.2025, சனி அன்று மாலை 4 மணிக்கு, ஐடி மேட்டர்ஸில் நடைபெறும்.
நன்றி, பக்தி

---

### விசிட்டர்ஸ் சென்டர் கஃபிட்டேரியா 27 அன்று மூடப்படும் (Cafeteria VC closed on Tuesday 27th)

விசிட்டர்ஸ் சென்டரில் உள்ள கஃபிட்டேரியா (ரைட் பாத் கஃபே) மே 27 செவ்வாய்க்கிழமை அன்று பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக்காக முழுமையாக மூடப்படும். நாங்கள் மே 28 புதன்கிழமை அன்று புதிய தோற்றத்துடன் திறந்திருப்போம்!
உங்கள் புரிதலுக்கு நன்றி, *கஃபிட்டேரியா*

---

### ஆரோவில் வாட்டர் சர்வீஸ் தொலைபேசி எண் மாற்றம் (Change of Landline Number – Auroville Water Service)

அன்பார்ந்த குடியிருப்பாளர்களே,

ஆரோவில் வாட்டர் சர்வீஸின் தரைவழி தொலைபேசியின் புதிய எண் 0413 3509161 ஆகும். பழைய எண் இனி செயல்படாது. இதை உங்கள் தொடர்புகளில் புதுப்பிக்கவும்.

நன்றி, வணக்கம். *ஆரோவில் வாட்டர் சர்வீஸ் குழு,* avwaterservice@auroville.org.in

### ஸ்ரீ அரவிந்தரின் சிந்தனைப் பொறிகள் - பக்தி

**கடவுள் நமக்குத் தரும் வேதனையில் நான்கு கட்டங்கள் உண்டு; வெறும் வேதனை; இன்பத்திற்கு இட்டுச் செல்லும் வேதனை; இன்பமாக உணரப்படும் வேதனை; ஆனந்தத்தின் தூய, தீவிர வடிவமாகவே இருக்கும் வேதனை.**
**வேதனை என்பதே இல்லாத ஆனந்தப் பரப்புகளையே ஒருவன் எய்திவிட்டாலும், அங்கும் தாங்கவொண்ணாப் பரவசம் என்னும் மாறுவேடத்தில் வேதனை நீடிக்கிறது.**

## கருணையின் சாத்தியம் - திரைப்படக் காட்சி இரவு (The Potential of Kindness - Movie Night)

**மே 27 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு @ பித்தாங்கா**



கருணையின் சாத்தியம் குறித்த எங்கள் ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக நாங்கள் ஒரு சிறப்பு திரைப்படக் காட்சி இரவை நடத்துகிறோம். கருணையின் கதைகளைக் காணும்போது மனத்தின் உள்ளே என்ன மாறுகிறது என்பதைக் காண நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

இதை ஆராய, 'A Man Called Otto' 'ஓட்டோ என்று அழைக்கப்படும் ஒரு மனிதன்' (இணைப்பு மற்றும் இரக்கம் பற்றிய ஒரு மனதைக் கவரும் கதை) காண்பிப்போம். நீங்கள் அனைவரும், உங்கள் நண்பர்களையும் அழைத்து வாருங்கள், கருணையில் எங்கள் பரிசோதனையை ஆதரிக்கவும், படத்தையும் இரசிக்கவும் நாங்கள் அழைக்கிறோம்!

இந்த இலவச நிகழ்வுக்கு அனைவரையும் வரவேற்கிறோம். திரையில் கருணையைப் பார்ப்பது நம் உணர்வுகளில் நேர்மறையான மாற்றங்களை உருவாக்குகிறதா, இல்லையா என்பதைக் கண்டறிய எங்களுக்கு உதவ, (படத்திற்கு முன்னும் பின்னும்) ஒரு ஆய்வை முடிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

பித்தாங்கா இந்த நிகழ்வை நடத்துகிறது. நாங்கள் மாலை 5 மணிக்குத் தொடங்கி, மாலை 7.30 மணிக்குள் முடிப்போம். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் ஹெலனை 7094753054 என்ற வாட்ஸ்அப் எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
*ஹெலன் & நிகேதனா*

---

## பயிற்சிப்பட்டறை பற்றிய அறிவிப்பு (Workshop: Announcement)

**மேதையை உருவாக்குதல் (Creating GENIUS).**
**மே 24, பூமிகா ஹால், பாரத் நிவாஸ். நேரம்: காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை**

தாய்மார்களாகப் போகிறவர்கள், இளம் தாய்மார்கள், பெண்கள் ஆகியோர் கற்றுக்கொள்ள பொன்னான வாய்ப்பு.
திருமதி ரேவதி சங்கரன் அவர்கள், நிறுவனர் (லிட்டில் ஜெம்ஸ்), கல்வியாளர் - உள்ளுணர்வு கருத்தாக்கம், ஸ்ரீ அன்னையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இயற்கைக் கல்விக்கு முந்தைய மற்றும் பிந்தையது.
(இந்நிகழ்ச்சி தமிழில் நடக்கும்)

---

## உலக விளையாட்டு கோடைச் சிறப்பு! (World Game Summer Special!)

மணல் நிரப்பப்பட்ட ஒரு பெட்டியில் 'உங்கள் உலகத்தை' உருவாக்க இதோ ஒரு வாய்ப்பு. 'மணல் விளையாட்டு' என்று அழைக்கப்படும் இந்த எளிய செயல்பாடு கற்பனை மற்றும் உள்ளுணர்வைத் திறந்து, உங்கள் சொந்த தனித்துவமான உயிருள்ள ஆன்மாவை வெளிப்படுத்துகிறது.
மக்கள் என்ன சொல்கிறார்கள்: "இது மிகவும் திரவமான, ஆழமான மற்றும் தன்னிச்சையான அனுபவமாக இருந்தது, ஒருவர் தேர்வுசெய்யக்கூடிய, விளையாடக்கூடிய மேலும் ஒருவரின் உலகில் இடம் பெறக்கூடிய அனைத்தையும் கொண்டிருந்தது. கட்டமைக்கப்பட்டது எனது வாழ்க்கைப் பாதை மற்றும் எதிர்கால நோக்குநிலை பற்றி நிறைய வெளிப்படுத்தியது."
ஒரு அமர்வின் காலம் 1.5 மணிநேரம். இது தனிப்பட்டதாகவோ அல்லது ஒரு நல்ல நண்பருடன் சேர்ந்து இருக்கலாம். (பெற்றோர் மற்றும் குழந்தையும் வரவேற்கப்படுகிறார்கள்)
மேலும் அறிய கிளிக் செய்யவும்: பெரியவர்கள் அல்லது குழந்தைகள் https://spiritandnature.org.in
ஐக்யாவைத் தொடர்பு கொள்ளவும்: +919488084952 வாட்ஸ்அப், spiritandnature@auroville.org.in

---

## டொமினிக் பாரிசோட் அவர்கள் காலமானார் (Passing: Dominique Parizot)



அன்பார்ந்த ஆரோவில் சமூகத்தவருக்கு,
டொமினிக் அவர்கள் காலமானார் என்பதை தங்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். மருத்துவச் சிகிச்சைக்காக பிரான்சுக்குச் சென்றிருந்த அவர், சில நாட்களுக்கு முன்பு இறந்துவிட்டதாக அவரது மகள் லிசா எங்களுக்கு தெரிவித்தார்.
அன்னாருக்கு வயது 72.

டொமினிக் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக ஆரோவில் செயல்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருந்தார், சிம்பிளிசிட்டி, ரெவலேஷன், ஹொரைசன் போன்ற குடியிருப்புகளில் வசித்து வந்தார். அவர் டெவலப்மென்ட், ஏவி ரேடியோ, பல்வேறு ஆரோவில் குழுக்களில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் தமது தாராள மனப்பான்மைக்கு பெயர் பெற்றவர், உதாரணமாக, தமிழ் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கவும், வீட்டுவசதி வழங்கவும் சிம்பிளிசிட்டியில் நிலம் வாங்கினார்.

அவர், ஸ்ரீ அரவிந்தரின் தத்துவங்களை அர்ப்பணிப்புடன் பின்பற்றுபவராக திகழ்ந்தார். குறிப்பாக "தெய்வீக வாழ்க்கையைப்" பற்றி பெரும்பாலும் சிந்தித்தார். தொடக்கத்தில், அவர் அமைதியற்ற நிலையில் இருந்தார், அதனால் அமைதியையும் மனத்தால் உணரும் திறனையும் தேடிக்கொண்டிருந்தார். அவரது வார்த்தைகளும் முகபாவங்களும் சில சமயங்களில் புரிந்துகொள்வது கடினமாக இருந்தாலும், அமைதிக்கான அவரது ஏக்கம் தெளிவாகத் தெரிந்தது.

அவருடைய நண்பர்களாகிய நாங்கள், அவருக்குத் தேவைப்படும் நேரத்தில் எங்களால் அதிகமாக உதவ முடியாமல் போனதற்கு மிகவும் வருந்துகிறோம். இப்போது, அவர் மறைவில், அவர் தேடிய அமைதி அவருக்கு கிடைக்க நாம் பிரார்த்திக்கிறோம். நித்திய அமைதியிலும் ஒளியிலும் சாந்தியடைய ஸ்ரீ அன்னை அவருக்கு வழிகாட்டட்டும்.
அவரை இழந்து வாடும் அவருடைய மகள் லிசாவுக்கு நமது இரங்கலும், அன்பும் ஆதரவும் உரித்தாகுக. *ஓம்~*
அன்புடனும் நினைவுகளுடனும், *லூயிஸ், ராமு*